# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI

Daily Morning

Vol : 01 | Issue : 70 | 4 Pages | 12.10.2023 | Thusday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர் : 01 | இதழ் : 70 | 4 பக்கங்கள் | 12.10.2023 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## சுவர் ஏறி குதித்த அகிலேஷ் யாதவ்: காரணம் என்ன?



லக்னோ, அக். 12

சுதந்திரப் போராட்ட வீரரான ஜெயப்பிரகாஷ் நாராயணின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்பட்டு வருகிறது.

உத்தர பிரதேசம் மாநிலம் லக்னோவில் ஜெயபிரகாஷ் நாராயண் சர்வதேச மையம் செயல்பட்டு வருகிறது.


இதற்கிடையே, சமாஜ்வாடி கட்சி தலைவரும், முன்னாள் முதல் மந்திரியுமான அகிலேஷ் யாதவ் மரியாதை செலுத்துவதற்காக அங்கு

தொண்டர்களுடன் திரண்டார். ஆனால் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

அங்கு தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு இருந்ததால் அனுமதி மறுக்கப்பட்டு கதவும் மூடப்பட்டது. இதைக் கண்டித்து சமாஜ்வாடி கட்சி தொண்டர்கள் கோஷமிட்டனர்.

இந்நிலையில், அகிலேஷ் யாதவ் அருகிலுள்ள சுவர் மீது ஏறி குதித்து உள்ளே சென்று ஜெயப்பிரகாஷ் நாராயணுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதனால் அங்கு சிறிது பரபரப்பு ஏற்பட்டது.

## அமெரிக்கா இஸ்ரேலுடன் துணை நிற்கிறது அதிபர் ஜோ பைடன் வீடியோ வெளியீடு



அமெரிக்கா, அக். 12

பாலஸ்தீன பயங்கரவாத ஹமாஸ் அமைப்பு, இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியதில் 1000க்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள் பலியானார்கள்.

இதனை தொடர்ந்து இஸ்ரேல், ஹமாஸ் அமைப்பை முற்றிலும் அழிக்க போவதாக கூறி போர் தொடுத்திருக்கிறது. காசா பகுதி முழுவதும் ஹமாஸ் பயங்கரவாதிகளை இஸ்ரேலிய பாதுகாப்பு படையினர் தேடி தேடி வேட்டையாடி வருகின்றனர்.

காசா முழுவதும் குடிநீர், உணவு, மின்சாரம், எரிபொருள் உட்பட அனைத்து சேவைகளையும் இஸ்ரேல் துண்டித்துவிட்டது. இஸ்ரேலின் தாக்குதலால் காசாவிலுள்ள மருத்துவமனைகள் காயமடைந்தவர்களால் நிரம்பி வழிகிறது.

இந்நிலையில், அமெரிக்கா இஸ்ரேலுடன் துணை நிற்கிறது என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஜோ பைடன் வெளியிட்டுள்ள வீடியோவில்," பயங்கரவாதத்தை எந்த விதத்திலும் நியாப்படுத்த முடியாது.

மக்களை காக்க, தங்கள் நாட்டை தற்காத்துக் கொள்ள தாக்குதலுக்கு பதிலடி தர இஸ்ரேலுக்கு தேவையான உதவிகளை அமெரிக்கா செய்யும்.

தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க இஸ்ரேலுக்கு உதவுவோம்" என ஜோ பைடன் குறிப்பிட்டுள்ளார்.

## 104 வயதில் ஸ்கை டைவிங் செய்து கின்னஸ் சாதனை படைத்த மூதாட்டி மரணம்



அமெரிக்கா, அக். 12

அமெரிக்காவில் 104 வயது மூதாட்டி டோரத்தி ஹர்ஃப்னர் என்பவர் கடந்த 1ம் தேதி ஸ்கை டைவிங் செய்து உலகசாதனை படைத்தார். இல்லினாய்ஸின் ஒட்டாவாவில் உள்ள ஸ்கை டைவ் சிகாகோவில் ஒரு விமானத்தில் இருந்து 13,500 அடி உயரத்திலிருந்து டோரத்தி குதித்து சாதனை படைத்தார். இதனையடுத்து, அவர் உலகின் மிகவும் மூத்த ஸ்கை டைவர் என்று கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்தார்.

இந்நிலையில், கின்னஸ் சாதனை படைத்து ஒரு வாரம் மட்டுமே ஆன நிலையில், மூதாட்டி டோரத்தி உயிரிழந்துள்ளார். டோரத்தி, ப்ரூக்டேல் லேக் வியூ மூத்த வாழ்க்கை சமூகத்தில் அவரது படுக்கையிலே இறந்து கிடந்தார் என்று அவரது நண்பர் ஜோ கானன்ட் கூறினார். அவர் ஞாயிற்றுக்கிழமை இரவே இறந்தஇருக்கக்கூடும் என்று கூறப்படுகிறது.

இதுகுறித்து, ஸ்கைடிவ் சிகாகோ மற்றும் யுஎஸ் பாராசூட் சங்கத்தின் செய்தித் தொடர்பாளர், டோரத்தியின் கடைசி டைவ் அவரது 'உற்சாகமான, நன்கு வாழ்ந்த வாழ்க்கையை' பிரதிபலித்துள்ளது. ஸ்கை டைவிங் என்பது நம்மில் பலர் பாதுகாப்பாக நடத்தப்படும் ஒரு செயலாகும். ஆனால், வாழ்நாளின் சிலிர்ப்பைப் பெற இது ஒருபோதும் தாமதமாகாது என்று டோரத்தி நமக்கு நினைவூட்டுகிறார்" என்றார்.

டோரத்தி தூங்கிக் கொண்டிருந்தபோது இறந்துள்ளார். இருப்பினும், அவரது மரணத்திற்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

## திருப்பதி கோவில் அருகே கோவா பக்தர்களிடம் ரூ.1 லட்சம், 5 செல்போன்கள் திருட்டு

திருப்பதி, அக். 12

கோவாவை சேர்ந்த 15 பக்தர்கள் ஏழுமலையானை தரிசனம் செய்வதற்காக திருப்பதிக்கு வந்தனர்.

அவர்கள் கருடாத்ரி நகரில் உள்ள திருப்பதி தேவஸ்தான தங்கும் விடுதியில் 2 அறைகளை எடுத்து தங்கினர். நேற்று முன்தினம் காலை தரிசனத்திற்கு சென்றனர்.

அந்த நேரத்தில் மர்மநபர்கள் அறையின் பூட்டை உடைத்து ரூ. 1 லட்சம், 5 செல்போன்களை திருடி சென்று விட்டனர். தரிசனம் முடிந்து வந்த பக்தர்கள் அறையில் திருட்டு நடந்திருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

அறைக்குள் சென்று பார்த்த போது அவர்களது உடமைகள் அனைத்தும் சிதறி கிடந்தது.

திருப்பதி தேவஸ்தான விடுதி அறைகளை வாடகைக்கு எடுக்கும் பக்தர்களுக்கு வழக்கமாக 2 சாவிகள் வழங்குவது வழக்கம்.

ஆனால் கோவா பக்தர்களுக்கு ஒரு சாவி மட்டுமே விடுதி ஊழியர்கள் வழங்கி உள்ளனர். இதனால் விடுதி ஊழியர்கள் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டு இருக்கலாம் என சந்தேகம் எழுந்து உள்ளது.

இது குறித்து பக்தர்கள் திருமலை போலீசில் புகார் செய்தனர். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கொடநாடு வழக்கு குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவர்: மு.க.ஸ்டாலின்

சென்னை, அக். 12

கொடநாடு விவகாரம் தொடர்பாக சட்டமன்ற உறுப்பினர் வைத்திலிங்கம் கொண்டு வந்த சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விளக்கம் அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

கொடநாடு வழக்கு சிபிசிஐடியின் கீழ் இருப்பது அனைவருக்கும் தெரியும். திமுக ஆட்சிக்கு வந்த பிறகு தான் சிபிசிஐடிக்கு உத்தரவிட்டோம். கொடநாடு வழக்கை சிபிசிஐடி விசாரித்து வருகிறது.



விசாரணையின் முன்னேற்றம் குறித்தும் தற்போதைய நிலவரம் குறித்த அறிக்கையை விரைவில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட இருக்கிறது.

எனவே இந்த வழக்கில் யார் யார் தவறு செய்து இருக்கிறார்கள் என்பது குறித்து விரைவில் தெரியவரும். இந்த வழக்கில், குற்றவாளிகள் யாராக இருந்தாலும், எந்த உயரத்தில் இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

## தீபாவளி பலகார சீட்டு உணவு பாதுகாப்புத்துறை அதிரடி உத்தரவு

தாராபுரம், அக். 12

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தரமிக்க இனிப்பு வகைகள் தயாரிப்புக்கான வழிகாட்டு நெறிமுறைகளை, உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர். அதில் தீபாவளிக்கு தயாரிக்கப்படும் இனிப்பு வகைகளில், தரத்துக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. வழிகாட்டு நெறிமுறைகளில் கூறியுள்ளதாவது:

இனிப்பு கார வகைகள், பேக்கரி பொருட்களை, தரமான மூலப்பொருட்கள் கொண்டு சுகாதாரமான முறையில் தயாரிக்க வேண்டும். கலப்படம், அனுமதிக்கப்பட்ட அளவை விட, அதிக நிறமிகள், கார வகைகளில் நிறமிகளை பயன்படுத்தக்கூடாது. பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தக்கூடாது. சூடான பொருட்களை பிளாஸ்டிக் தாள் கொண்டு மூடி வைக்கக்கூடாது. அனுமதிக்கப்பட்ட அளவை விட, அதிக நிறமிகள் பயன்படுத்தினால் உணவு மாதிரி எடுக்கப்பட்டு, பகுப்பாய்வுக்கு அனுப்பப்படும். எண்ணெய், நெய் மற்றும் மூலப் பொருட்களின் விபரங்கள் முழுமையாக அதன் கொள்முதல் கேன்கள், டின் லேபிளில் அச்சிடப்பட்டு இருக்க வேண்டும். பால், பொருட்கள் கொண்டு தயாரிக்கப்படும் இனிப்புகளை தனியாக வைக்க வேண்டும். பயன்படுத்தும் கால அளவை அச்சிட்டிருக்க வேண்டும்.

இனிப்புகளில் பூஞ்சை தொற்று வராதவாறு, பாதுகாக்க வேண்டும். இனிப்பு, கார வகைகள் தயாரிப்பில் ஈடுபடுபவர்கள் பலகார சீட்டு நடத்துபவர்கள் அனைவரும் துறையில் பதிவு அல்லது உரிமம் பெற்றிருக்க வேண்டும். இவர்கள் துறையின் பாஸ்டாக் பயிற்சி பெற்றிருப்பது அவசியம். ஒரு முறை பயன்படுத்திய எண்ணெயை, மீண்டும் பயன்படுத்தக்கூடாது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருப்பூரில் கறவை மாடு வளர்ப்பு பயிற்சி இன்று நடக்கிறது

திருப்பூர், அக். 12

திருப்பூர் கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் கறவை மாடு வளர்ப்பு பயிற்சி இன்று 12 ந்தேதி (வியாழக்கிழமை) நடைபெறுகிறது.

இது குறித்து திருப்பூர் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் தலைவர் மதிவாணன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு விவரம் வருமாறு:



திருப்பூர் மத்திய பேருந்து நிலையம் எதிரில் உள்ள கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் கறவை மாடு வளர்ப்பு பயிற்சி நாளை 12ந்தேதி (வியாழக்கிழமை) காலை 10 மணிக்கு நடைபெறுகிறது. மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் இந்தப் பயிற்சியில் பங்கேற்று கறவை மாடு வளர்ப்பு தொடர்பான சந்தேகங்களைத் தெளிவு படுத்திக் கொள்ளலாம். இது தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு 0421 2248524 என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாநில அளவிலான விளையாட்டு போட்டிகளில் திருப்பூர் விவேகானந்தா வித்யாலயா பள்ளி மாணவிகள் சாதனை

திருப்பூர், அக். 12

இந்தியாவின் பள்ளி விளையாட்டு கூட்டமைப்பு சார்பில் மாநில அளவிலான கால்பந்து போட்டிகள் சிதம்பரத்தில் உள்ள உள்விளையாட்டு அரங்கில் அண்மையில் நடைபெற்றது. இந்தப்போட்டியில் திருப்பூர் விவேகானந்தா வித்யாலயா பள்ளியின் 10 ம் வகுப்பு மாணவி தியாஸ்ரீ வெற்றி பெற்று தேசிய அளவிலான கால்பந்து போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

அதேபோல, கே.பி.ஆர். கல்லூரியில் நடைபெற்ற மாநில அளவிலான கராத்தே போட்டியில் 9 ம் வகுப்பு மாணவி திவ்யா வெற்றி பெற்று தேசிய அளவிலான போட்



டிக்குத் தகுதி பெற்றுள்ளார். மாநில அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளை பள்ளியின் முதல்வர் சின்னையா, துணை முதல்வர் ரவி, உடற்கல்வி ஆசிரியர்கள் பாலமுருகன், மோகனசுந்தரம் ஆகியோர் பாராட்டினர்.

ஏற்கனவே எம்.ஜி.ஆர். சிலை அகற்றப்பட உள்ளதாக கடந்த ஆண்டு செய்தி வெளிவந்தவுடன் நான் உடனடியாக முதல்அமைச்சரை நேரில் சந்தித்து சிலையை அகற்றக் கூடாது என்று கோரிக்கை வைத்தேன். மேலும் சிலையை சுற்றி ரவுண்டானா அமைத்து சிலையை பராமரிக்கவேண்டும்எனகோரிக்கை வைத்திருந்தேன்

முதல்அமைச்சரும் அதற்கு சம்மதம் தெரிவித்தார்.

ஆனால் நேற்றைய தினம் இரவோடு இரவாக சிலை அகற்றப் பட்டுள்ளது எம்.ஜி.ஆரின் தொண்டர்கள் இடையே மன வருத்தத்தை ஏற்படுத்தி உள்ளது.

எனவே புதுவை அரசு கலந்து பேசி அதே பகுதியில் எம்.ஜி.ஆர். சிலையை சிறப்பாக அமைத்து தர உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## திருப்பூர் சிக்கண்ணா அரசு கல்லூரியில் உலக மனநல தின விழிப்புணர்வு கருத்தரங்கம்




திருப்பூர், அக். 12

திருப்பூர் சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியில் உலக மனநல தின விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் கிருஷ்ணன் தலைமை வகித்தார். நாட்டு நலப்பணித் திட்ட அலகு 2 ஒருங்கிணைப்பாளர் மோகன்குமார் முன்னிலை வகித்தார்.

இதில், சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மனநல மருத்துவர் சஞ்சய் பேசியதாவது:

ஒருவரின் உடல் மட்டுமல்ல, மனமும் நலமாக இருந்தால்தான் அவரால் ஆரோக்கியமாக வாழ முடியும். மனமும், உடலும் தனித்தனியாக இருப்பதில்லை. ஒன்றின் பாதிப்பு மற்றொன்றையும் பாதிக்கும்.

போதைப்பொருள்கள் பயன்படுத்துவது, வேலைப்பளு போன்ற பல்வேறு காரணங்களால் மனநலம் பாதிக்கப்படுகிறது.

மக்களிடம் மனநலப் பிரச்னைகள் குறித்த விழிப்பு ணர்வை ஏற்படுத்தவும், மனநலக் கல்வியின் அவசியத்தை எடுத்துரைக்கவும் உலக மனநல தினம் உருவாக்கப்பட்டது. மனநலம் பாதிக்கப்பட்டவர் குறித்த விவரங்கள் தெரிய வந்தால் 104 என்ற எண்ணுக்கும், மனச்சோர்வு உள்ளவர்கள் தாங்களாகவே முன்வந்து 14416 என்ற எண்ணிற்கும் தகவல் தர வேண்டும் என்றார். பிறகு மாணவ செயலர்கள் சுந்தரம், ராஜபிரபு, தினேஷ்கண்ணன், சிரஞ்சீவி, சிவசண்முகம் ஆகியோர் தலைமையில் 200க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டு மக்களுக்கு ஏதேனும் மனநல பிரச்சினைகள் இருந்தால் அவர்களுக்கு உதவுவேன், மனநலம் பாதிக்கப்பட்டோரை பாதுகாப்பேன் என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

0முடிவில் மாணவ செயலர் சௌ்லின் நன்றி கூறினார்.

# தொழிலாளர் நல நிதி பங்களிப்பு கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கலாம்: தொழிலாளர் உதவி ஆணையர் தகவல்




திருப்பூர், அக். 12

தொழிற்சாலைகள், கடைகள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள் மற்றும் தோட்ட நிறுவனங்கள் போன்ற அமைப்பு சார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 1972 ம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி சட்டத்தின்படி, தொழிலாளர் நல நிதி செலுத்த வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் தொழிலாளர் மற்றும் நிறுவனத்தின் பங்காக ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ.60 கணக்கிட்டு நிறுவனத்தில் பணிபுரியும் எண்ணிக்கைக்கேற்ப தொழிலாளர்நலநிதிதொகையை வாரியத்துக்கு செலுத்த வேண்டும்.

அதன்படி நடப்பு 2023 ம் ஆண்டுக்கான தொழிலாளர் நல நிதி செலுத்தும் தொழிலாளர்கள் மற்றும் அவரை சார்ந்தவர்களுக்கு வாரியத்தின் மூலம் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதில் பிரி கே.ஜி.முதல் பட்ட மேற்படிப்பு வரை படிக்கும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ரூ.1,000 முதல் ரூ.12 ஆயிரம் வரை கல்வி உதவித்தொகை, புத்தகம் வாங்க உதவித்தொகை, எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் பிளஸ்2 வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை பெற தொழிலாளர்கள் விண்ணப்பிக்கலாம்.

இந்த உதவித்தொகையை பெற தொழிலாளரின் மாத ஊதியம் ரூ.25 ஆயிரத்துக்குள் இருக்க வேண்டும். விண்ணப்பங்களை தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய அலுவலகத்தில் நேரிலோ அல்லது www.lwb.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை செயலாளர், தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், சென்னை6 என்ற முகவரிக்கு வருகிற டிசம்பர் மாதம் 31ந் தேதிக்குள் வாரியத்துக்கு வந்து சேர வேண்டும்.

இந்த தகவலை திருப்பூர் தொழிலாளர் உதவி ஆணையாளர் (அமலாக்கம்) ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

# செலாம்பாளையம் துணைமின் நிலைய பகுதியில் இன்று மின்தடை

தாராபுரம், அக்.12

தாராபுரம் கோட்ட மின் சார வாரிய செயற்பொறியாளர் வ.பாலன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது:

தாராபுரத்தை அடுத்த செலாம் பாளையம் துணை மின் நிலையத்தில் நாளை (வியாழக்கிழமை) மின் கம்பிகள் பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளது. இதனால் நாளை காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை செலாம் பாளையம், தளவாய்பட்டினம், ஊத்துப்பாளையம், சென்னாக்கல்பாளையம், கொட்டமுத்தம்பாளையம், தேவநல்லூர், சந்தராபுரம், நாட்டுக்கல்பாளையம், கள்ளிவலசு, சிக்கன்னாபுரம், ரஞ்சிதா பாளையம், வட்டமலை புதூர் மற்றும் இதர பகுதிகளில் மின்சாரம் வினியோகம் தடை செய்யப்படும்.

# செலாம்பாளையம் துணைமின் நிலைய பகுதியில் இன்று மின்தடை

தாராபுரம், அக்.12

தாராபுரம் கோட்ட மின் சார வாரிய செயற்பொறியாளர் வ.பாலன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது:

தாராபுரத்தை அடுத்த செலாம் பாளையம் துணை மின் நிலையத்தில் இன்று மின் கம்பிகள் பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளது. இதனால் நாளை காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை செலாம் பாளையம், தளவாய்பட்டினம், ஊத்துப்பாளையம், சென்னாக்கல்பாளையம், கொட்டமுத்தம்பாளையம், தேவநல்லூர், சந்தராபுரம், நாட்டுக்கல்பாளையம், கள்ளிவலசு, சிக்கன்னா புரம், ரஞ்சிதா பாளையம், வட்டமலை புதூர் மற்றும் இதர பகுதிகளில் மின்சாரம் வினியோகம் தடை செய்யப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



கலெக்டர் கிறிஸ்துராஜ் திருப்பூர் மாவட்டம் தாராபுரம் வட்டம் கொழுமங்குளி ஊராட்சி கிராம சேவை மைய வளாகத்தில் வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

# திருப்பூரில் பயங்கர ஆயுதங்களுடன் சுற்றித்திரிந்த 3 பேர் கைது: வாகன சோதனையின் போது போலீசில் சிக்கினர்



திருப்பூர், அக். 12

திருப்பூர் மாநகர் பகுதிகளில் வழிப்பறி, நகைப்பறிப்பு, திருட்டு போன்ற சம்பவங்களை தடுக்கும் வகையில்மாநகரபோலீஸ் கமிஷனர் பிரவீன் குமார் அபினபுஉத்தரவின்பேரில் போலீசார் தீவிர கண்காணிப்பு மற்றும் வாகன சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன்படி நேற்று இரவு திருப்பூர் வடக்கு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உதவி ஆணையர் அனில் குமார் தலைமையில் திருப்பூர் வடக்கு குற்றப்பிரிவு இன்ஸ்பெக்டர் ராஜசேகரன் மற்றும் போலீசார் புதிய பேருந்து நிலையம் முன்பு வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அவ்வழியாக இரு சக்கர வாகனத்தில் வந்த நபர்களை நிறுத்தி விசாரித்த போது அவர்கள் முன்னுக்குப்பின் முரணான தகவல்களை கூறினர்.

இதனால் அவர்கள் மீது சந்தேகம் அடைந்த போலீசார் திருப்பூர் வடக்கு போலீஸ் நிலையத்திற்கு அழைத்து சென்று தீவிர விசாரணை மேற்கொண்டனர்.

இதில் இரு சக்கர வாகனத்தில் வந்தவர்கள் திருப்பூர் ஸ்ரீநகரை சேர்ந்த பன்னீர்செல்வம், மும்மூர்த்தி நகரை சேர்ந்த மணிகண்டன், புதிய பேருந்து நிலைய பகுதியை சேர்ந்த குணசேகரன் என்பதும், அவர்களிடமிருந்து பட்டாக்கத்தி, இரும்பு ராடு உள்ளிட்ட பயங்கர ஆயுதங்கள் இருந்ததையும் கண்டுபிடித்து பறிமுதல் செய்தனர்.

தொடர்ந்து 3 பேரையும் கைது செய்து விசாரணை நடத்திய போது, அவர்கள் மீது கொலை, கொள்ளை, திருட்டு உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் இருப்பது தெரியவந்தது. கைதான மணிகண்டன் ஒரு கொலை வழக்கில் கைதாகி கோவை சிறையில் அடைக்கப்பட்டு இருந்த போது, அங்கு திருட்டு வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டு இருந்த குணசேகரன் மற்றும் பன்னீர்செல்வம், திருப்பூர் டூம்லைட் ரஹீம், குமார் ஆகியோருடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அவர்கள் நண்பர்களாக பழகி உள்ளனர். இதில் பன்னீர்செல்வம் தவிர மற்ற 4பேரும் சில மாதங்களுக்கு முன்பு சிறையில் இருந்து வெளியே வந்து விட்டனர்.

பன்னீர்செல்வம் கடந்த 2 நாட்களுக்கு முன்பு சிறையில் இருந்து வந்துள்ளார். திருப்பூர் பி.என். ரோட்டில் உள்ள தொழில் அதிபர் வீட்டில் காவலாளி இல்லாததை நோட்டமிட்டு அறிந்து வைத்திருந்த மணிகண்டன், சிறையில் இருந்து வந்த பன்னீர்செல்வம் மற்றும் நண்பர்கள் குணசேகரன், ரஹீம், குமார் ஆகியோருடன் சேர்ந்து பயங்கர ஆயுதங்களுடன் தொழிலதிபர் வீட்டில் கொள்ளையடிக்க சென்ற போது போலீசில் சிக்கியுள்ளனர்.

தொடர்ந்து அவர்களிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இதன் மூலம் அவர்கள் வேறு எங்கெல்லாம் கொள்ளையடித்துள்ளனர் என்பது போன்ற விவரங்கள் தெரிய வர வாய்ப்புள்ளது. சரியான நேரத்தில் கொள்ளையர்களைபோலீசார் பிடித்ததால் மிகப்பெரிய கொள்ளை சம்பவம் தடுக்கப்பட்டுள்ளது.

# அரசு பள்ளியில் மனநல தின விழிப்புணர்வு நிகழ்ச்சி



மன்னார்குடி, அக். 12

உலக மனநல தினத்தையொட்டி மன்னார்குடி இந்தியன் ரெட் கிராஸ் அமைப்பு, நேசக்கரம், திருத்துறைப்பூண்டி நம்பிக்கை தொண்டு நிறுவனம் ஆகியவை இணைந்து மன்னார்குடி அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியை துணை போலீஸ் சூப்பிரண்டு அஸ்வத் ஆண்டோ தொடங்கி வைத்து துண்டு பிரசுரங்களை வெளியிட அதனை பள்ளியின் தலைமை ஆசிரியர் சுப்பு லட்சுமி பெற்றுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் நம்பிக்கை தொண்டு நிறுவனத்தின் நிறுவனர் சவுந்தர்ராஜன் தலைமை தாங்கினார்.

திட்ட இயக்குனர் விஜயா, மன்னார்குடி இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டியின் வட்ட செயலாளர் கோபால கிருஷ்ணன், துணை தலைவர் ஆசிரியர் ராஜப்பா, நேசக்கரம் ஆசிரியர் தங்க பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நேசக்கரம் ஒருங்கிணைப்பாளர்கள் கார்த்திகேயன், தீனதயாளன், நேசக்கரம் தன்னார்வலர் குழு ஒருங்கிணைப்பாளர்கள் பெலிக்ஸ், எழிலரசன் மற்றும் கலை குழுவினர் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து, விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடந்தது. மனநலம் பாதிக்கப்பட்டவர்போல்தத்ரூபமாக நடித்து, அவரை எவ்வாறு வழிநட த்துவது, குணப்படுத்துவது என்று நாடகம் மூலம் விளக்கப்பட்டது. நிகழ்ச்சியில் ஆசிரியர்கள், மாணவர் பலர் கலந்து கொண்டனர்.

# கடலூர் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 42 டன் ரேஷன் அரிசி பறிமுதல்: 91 வழக்குகளில் 87 பேர் கைது

கடலூர், அக். 12

அரசு பொதுவினியோகத் திட்டத்தின் கீழ் பொது மக்களுக்கு மானிய விலையில் வழங்கப்படும் பொருட்கள் கடத்தலை தடுக்க குடிமை பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வு த்துறை இன்ஸ்பெக்டர் சுரேஷ் குமார் தலைமையில், சப்இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன் மற்றும் போலீசார் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர். கடலூர் மாவட்டத்தில் திட்டக்குடி, கொரக்கவாடி, ராமநத்தம், தொழுதூர், வேப்பூர் தாலுக்கா பகுதி களில் நடப்பு ஆண்டில் 91 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 42 டன் ரேஷன் அரிசி பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும் இந்த வழக்குகளில் சம்பந்தப்பட்ட 16 வாகனங்கள், 3 மோட்டார் சைக்கிள், ஒரு 3 சக்கர வாகனம் என மொத்தம் 20 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டது. இதில் தொடர்புடைய 87 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்துரேசன்பொருட்கள்கடத்தல்தடுப்பு சம்பந்தமாக பகல் மற்றும் இரவு நேரங்களில் ரோந்து நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. ரேஷன் பொருட்கள் கடத்தல் மற்றும் முறைகேடுகள் சம்பந்தமாக பொதுமக்கள் 24 மணி நேரமும் இயங்கக்கூடிய 1800 5995 950 என்ற இலவச தொலைபேசி எண்ணிற்கு தகவல் தெரிவிக்கலாம். இத்தகவலை கடலூர் குடிமை பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத்துறை இன்ஸ்பெக்டர் சுரேஷ்கு மார் தெரிவித்துள்ளார்.

# முச்சந்தி மகாகாளியம்மன் கோவிலில் முளைப்பாரி திருவிழா



நாகப்பட்டினம், அக். 12

நாகப்பட்டினத்தில் அமைந்துள்ள பழைமை வாய்ந்த ஸ்ரீ முச்சந்தி மகா காளியம்மன் ஆலயங்கள் அமைந்துள்ளன.

ஆலயத்தின் புரட்டாசி பொங்கல் திருவிழா காப்பு கட்டுதலுடன் துவங்கி நடைபெற்று வருகின்றது.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான முளைப்பாரி திருவிழா நடைபெற்றது.

இதனையொட்டி, 500க்கும் மேற்பட்ட பெண்கள் விரதமிருந்து வீட்டில் வளர்க்கப்பட்ட முளைப்பாரியை தாமரைக்குளம் தென்கரை தெரு, தர்ம கோவில் தெரு, மார்க்கெட் சாலை உள்ளிட்ட பகுதிகளிலிருந்து ஆலயத்திற்கு எடுத்து வந்து, அம்மனுக்கு சிறப்பு ஆராதனைகளுக்குப்பிறகு, மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது அதனை தொடர்ந்து ஊர்வலமாக சென்று நீர்நிலையில் கரைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

சக்தி கரகம் முன்னே செல்ல, ஆலயத்திலிருந்து புறப்பட்ட ஊர்வலம், வந்தடைந்தது.

அங்கு, முளைப்பாரியை வைத்து, பெண்கள் கும்மியடித்து, குலவையிட்டு வழிபாடு செய்தனர். தொடர்ந்து குளத்தில் முளைப்பாரி விடப்பட்டது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

போட்டியில் சுமார் 300 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

யோகா போட்டியில் கலந்து கொண்டு வெண்கல பதக்கம் பெற்றுள்ளார்.

# கொடிவேரி தடுப்பணையில் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி



கோபி, அக். 12

ஈரோடு மாவட்டத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற சுற்றுலா தளங்களில் ஒன்றானது கொடிவேரி அணை. இந்த அணைக்கு ஈரோடு மட்டுமின்றி பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், வெளி மாநிலங்களில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயனிகள் வருவது வழக்கம்.

இந்த நிலையில் கடந்த 2 நாட்களாக பவானி சாகர் அணையின்நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையால் அணைக்கு வரும் உபரிநீர் பவானி ஆற்றில் அதிகளவில் வெளி யேற்றப்பட்டு வருகிறது.

இதனால் கொடிவேரி தடுப்பணையில் இருகரைகளையும் தொட்டப்படி தண்ணீர் பெருக்கெடுத்து சென்றது. இதையொட்டி சுற்றுலா பயணிகளின் நலன் கருதி கொடிவேரியில் நேற்று குளிக்க தடைவிதி க்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் கோபி மற்றும்சுற்றுமழைகுறைந்ததால் கொடிவேரி தடுப்பணைக்கு வரும் தண்ணீர் வரத்தும் குறைந்தது. இதனால் தடுப்பணையில் வழக்கம் போல் தண்ணீர் செல்கிறது.

இதையடுத்து தடை நீக்கப்பட்டு கொடிவேரி தடுப்பணையில் இன்று முதல் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் பாதுகாப்புடன் குளிக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால் வழக்கம் போல் பொதுமக்கள் பலர் கொடிவேரி தடுப்பணைக்கு வந்து மகிழ்ச்சியுடன் குளித்து ரசித்து விட்டு சென்றனர்.

# தூய்மை பணியாளர்கள் திடீரென திருமணி முத்தாற்றில் இறங்கி போராட்டம் –பரபரப்பு



சேலம், அக். 12

சேலம் மாநகராட்சியில் ஒப்பந்த முறையில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் நியமனம் செய்யப்பட்ட தூய்மை பணியாளர்கள் திடீரென இன்று சேலம் கோட்டை மாரியம்மன் கோவில் அருகே உள்ள திருமணி முத்தாற்றில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அப்போது அவர்கள் தங்களை பணி நிரந்தரம் செய்யக்கோரியும், வார விடுமுறை மற்றும் ஆயுள் காப்பீடு, விடுமுறை நாட்களில் வேலை செய்தால் இரட்டிப்பு சம்பளம் ஆகியவை அமல்படுத்தக் கோரியும் சேலம் மாநகராட்சியில் தூய்மை பணியாளர்கள் விருப்பத்திற்கு மாறாக அதிகாரிகள் தன்னிச்சையாக பணியிடமாற்றம் செய்ததை ரத்து கோரியும் வலியுறுத்தினர்.

இந்த போராட்டத்திற்கு தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் குணாளன் தலைமை தாங்கினார். ஆற்றில் மழை தண்ணீர் பெருக்கெடுத்து ஓடும் நிலையில் பொருட்படுத்தாமல் தங்களது கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக 100க்கும் மேற்பட்டவர்கள் இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து டவுண் போலீசார் அங்கு வந்து அவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். அப்போது அவர்கள் எங்கள் கோரிக்கையை நிறைவேற்றினால்தான் நாங்கள் ஆற்றில் இருந்து மேலே வருவோம் என கூறினர். இதனால் அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. தொடர்ந்து போலீசார் நடத்திய பேச்சுவார்த்தைக்கு பிறகு அவர்கள் பத்திரமாக ஆற்றில் இருந்து கரைக்கு வந்தனர்.

இது குறித்து அவர்கள் கூறுகையில், சேலம் மாநகாட்சியில் 700க்கும் மேற்பட்டோர் வேலை செய்து வருகின்றோம். கடந்த மாதம் வரை மாநகராட்சி மகளிர் சுய உதவிக்குழு மூலம் மாதம் ரூ.11 ஆயிரத்து 600 ரூபாய் கூலி வாங்கி வந்தோம். தற்போது இந்த மாதம் ரூ.9,700 ஆக குறைக்கப்பட்டுள்ளது. மற்ற மாநகராட்சி பணியாளர்களுக்கு வழங்குவது போல் எங்களுக்கும் ஊதியம் வழங்க வேண்டும். தனியார் நிறுவனத்துடன் போடப்பட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும் என்றனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# நாமக்கல்லில் காவல்துறை சார்பில் விழிப்புணர்வு பேரணி



நாமக்கல், அக். 12

பெண் குழந்தைகளை பாதுகாக்க வலியுறுத்தி நாமக்கல்லில் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது. நாமக்கல் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி முன்பு அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் பூர்ணிமா கொடி அசைத்து தொடங்கி வைத்தார். பள்ளி முன்பு தொடங்கி மணிக்கூண்டு, திருச்சி சாலை, டாக்டர் சங்கரன் சாலை, மோகனூர் சாலை வழியாக மீண்டும் பள்ளியை பேரணி வந்தடைந்தது.

பேரணியில் பெண்குழந்தை களை பாதுகாப்போம், அனைத்து பெண் குழந்தைகளுக்கும் கல்வியை உறுதி செய்வோம். பாலின தேர்வு அடிப்படையில் கருவில் பெண் குழந்தைகள் அழிவதை தடுக்க வலியுறுத்தி பேரணியில் ஈடுபட்ட மாணவிகள் கோஷங்கள் எழுப்பினர். இப் பேரணியில் பள்ளி தலைமை ஆசிரியை சிவகாமி, உதவி தலைமை ஆசிரியர் கற்பகம், போக்குவரத்து ஆய்வாளர் ஷாஜஹான், சப் இன்ஸ்பெக்டர் சதாசிவம், அனைத்து மகளிர் காவல் நிலைய சப்இன்ஸ்பெக்டர்கள் சுமதி, லட்சுமி, பள்ளி ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# நாகர்கோவில் தலைமை தபால் நிலையத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த வாலிபர் கைது

நாகர்கோவில், அக். 12

நாகர்கோவில் நாகராஜா கோவில் வடக்கு ரத வீதியில் மாவட்ட தலைமை தபால் நிலையம் உள்ளது. நேற்று காலை தலைமை தபால் நிலையம் என குறிப்பிட்டு வந்த கடிதத்தில் தலைமை தபால் நிலையத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாகவும் நாளை வெடித்து சிதறும் என்றும் குறிப்பிடப்பட்டு இருந்தது.

இதையடுத்து மாவட்ட தபால் துறை அலுவலர் சார்பில் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. வெடிகுண்டு நிபுணர்கள் மற்றும் போலீசார் தலைமை தபால் நிலையத்திற்கு வந்தனர். மோப்ப நாய் உதவியுடன் போலீசார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

தபால் நிலையத்தில் கிடந்த பார்சல்கள் அனைத்தையும் பரிசோதித்து பார்த்தனர். மெட்டல் டிடெக்டர் கருவி மூலமாகவும் சோதனை நடத்தப்பட்டது. ஆனால் வெடிகுண்டு எதுவும் சிக்கவில்லை. இதுகுறித்து தலைமை தபால் நிலைய சீனியர் போஸ்ட் மாஸ்டர் செல்வராஜ் கோட்டார் போலீசில் புகார் செய்தார்.

அவரது புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். வெடிகுண்டு மிரட்டல் விடுத்து கடிதம் எழுதிய நபர் யார்? என்பது குறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். அந்த கடிதம் எங்கிருந்து அனுப்பப்பட்டது? என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

அப்போது வடிவீஸ்வரம் தபால் நிலையத்திலிருந்து வந்ததாக அஞ்சல் முத்திரை பதிவாகி இருந்தது. இதையடுத்து போலீசார் வடிவீஸ்வரம் தபால் நிலைய பகுதியில் உள்ள சி.சி.டி.வி. கேமிராவின் காட்சிகளை ஆய்வு செய்தனர். தபால் நிலையத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் தொடர்பாக சுசீந்திரம் அருகே மருங்கூர் பகுதியை சேர்ந்த அசோக்குமார் என்பவரை போலீசார் பிடித்தனர்.

அவரிடம் விசாரணை நடத்திய போது முதலில் முன்னுக்குப்பின் முரணான தகவலை தெரிவித்தார். பின்பு அவர் தபால் நிலையத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் கடிதம் அனுப்பிய கடிதத்தை ஒப்புக்கொண்டார். அசோக்குமார் எதற்காக வெடிகுண்டு கடிதத்தை அனுப்பினார்? என்பது குறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில் அசோக்குமார் கடந்த சில ஆண்டுகளாக தலைமை தபால் நிலையத்தில் தற்காலிக ஊழியராக பணியாற்றி வந்துள்ளார். அவரை பணி நிரந்தரம் செய்யக்கோரி அவர் தெரிவித்துள்ளார். ஆனால் பணி நிரந்தரம் செய்யவில்லை.

இதனால் ஏற்பட்ட மன வருத்தத்தில் அசோக்குமார் வெடிகுண்டு மிரட்டல் கடிதத்தை அனுப்பியதாக கூறினார். போலீசார் அவரிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# திருப்பத்தூர் அருகே வாத்து, கோழி தகராறில் வாலிபர் கொலை: கூடை பின்னும் தொழிலாளி கைது

திருப்பத்தூர், அக். 12

திருப்பத்தூர் அடுத்த ஏ.கே. மோட்டூர் பகுதியை சேர்ந்தவர் சிலம்பரசன்(வயது35). வீடுகளுக்கு டைல்ஸ் ஒட்டும் வேலை செய்து வந்தார்.

இவரது மனைவி ஐமுனா. இவர்களுக்கு 2 வயதில் மகன் உள்ளார். ஐமுனா தற்போது கர்ப்பிணியாக உள்ளார். இவர்களது பக்கத்து வீட்டை சேர்ந்தவர் வெங்கடேசன் (60). கூடை பின்னும் தொழில் செய்து வருகிறார். இவருக்கு மனைவி, 2 மகள்கள் உள்ளனர்.

சிலம்பரசன் வீட்டில் 3 வாத்துகளை வளர்த்து வந்தார். இதே போல் வெங்கடேசனும் வீட்டில் ஏராளமான கோழிகளை வளர்த்து வருகிறார்.

வாத்துகள் வெங்கடேசன் வளர்க்கும் கோழிகளை கொத்தியதாக கூறப்படுகிறது. இதுகுறித்து அவர் சிலம்பரசனிடம் கேட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். இதனால் இவர்களுக்குள் அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது.

இந்த நிலையில் இன்று காலை கோழி, வாத்துகள் சம்பந்தமாக மீண்டும் இவர்களுக்குள் தகராறு ஏற்பட்டது.

இதில் சிலம்பரசனும், வெங்கடேசனும் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர்.

ஆத்திரமடைந்த வெங்கடேசன் வீட்டில் இருந்து கத்தியை எடுத்து வந்து சிலம்பரசன் கழுத்தில் வெட்டினார். இதில் அவர் ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார்.

இதுகுறித்துதிருப்பத்தூர் தாலுகா போலீசுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார் சிலம்பரசன் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக திருப்பத்தூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் போலீசார் வழக்கு பதிவு செய்து வெங்கடேசனை கைது செய்தனர். அவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

வாத்து, கோழி தகராறில் நடந்த கொலை சம்பவம் அந்தப் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# திருவெண்ணைநல்லூர் அருகே நாட்டுத் துப்பாக்கி, மோட்டார் சைக்கிள் பறிமுதல்: 2 வாலிபர்களுக்கு போலீசார் வலைவீச்சு

விழுப்புரம், அக். 12

திருவெண்ணைநல்லூர் அருகேயுள்ள சி.மெய்யூர் கிராமத்தில் போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அவ்வழியே 2 வாலிபர்கள் நாட்டுத் துப்பாக்கியுடன் மோட்டார் சைக்கிளில் வந்தனர். போலீசாரை கண்ட வாலிபர்கள், மோட்டார் சைக்கிளையும், நாட்டு துப்பாக்கியையும் அங்கேயே போட்டு விட்டு ஓடி விட்டனர்.

அவர்களை பிடிக்க போலீசார் முயற்சித்தும் தப்பியோடி விட்டனர். உடனடியாக வழக்கு பதிவு செய்த திருவெண்ணைநல்லூர் போலீசார், மோட்டார் சைக்கிளையும், நாட்டு துப்பாக்கியையும் பறிமுதல் செய்தனர். அதனை சாலையில் போட்டுவிட்டு தப்பியோடிய வாலிபர்களை போலீசார் தேடி வருகின்றனர்.

# கொடைக்கானலுக்கு இஸ்ரேல் நாட்டினர் வருகை: சோதனைச்சாவடி அமைத்து கண்காணிப்பு



கொடைக்கானல், அக். 12

மலைகளின் இளவரசியான கொடைக்கானலுக்குவருடம்முழுவதும் சுற்றுலா பயணிகள் வருகை இருந்து கொண்டே இருக்கும். குறிப்பாக வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் ஏராளமானோர் இங்கு வந்து மலைப்பாங்கான இடங்களில் டெண்ட் அமைத்து தங்கிச் செல்வது வழக்கம்.

நவம்பர் முதல் ஜனவரி வரை சீசன் காலத்தையொட்டி இஸ்ரேல், ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளைச் சேர்ந்த சுற்றுலா பயணிகள் வருகை தருவார்கள். இவர்கள் இங்குள்ள காட்டேஜ்களில் தங்கி இருந்து இயற்கை எழில் சூழ்ந்த இடங்களை கண்டு ரசித்தும், மலைப்பாங்கான இடத்தில் சென்று யோகாசனம் செய்தும் வழக்கம்.

கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முன்பாக இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்தவர்கள் அதிகமானோர் இங்கு வருகை தருவார்கள். அவர்களுக்காகவே பிரத்யேக காட்டேஜ்கள் வட்டக்கானல் அருகே உள்ளது. தற்போது இஸ்ரேல் நாட்டில் போர் பதட்டம் சூழ்ந்துள்ள நிலையில் அந்நாட்டைச் சேர்ந்தவர்கள் கொடைக்கானலுக்கு படையெடுக்க தொடங்கியுள்ளனர்.

இது குறித்து போலீசார் தெரிவிக்கையில், கொடைக்கானல் வட்டக்கானல் பகுதியில் வருடம் தோறும் இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்தவர்கள் அதிக அளவில் வந்து தங்குவது வழக்கம். இவர்கள் முறையற்ற வகையில் தங்குவதை தடுக்க அவர்களது அனைத்து ஆவணங்களும் சரிபார்க்கப்பட்ட பின்பே அனுமதி அளிக்கப்படும். இதற்காக வட்டக்கானல் பகுதியில் சோதனைச்சாவடியும், கடந்த 5 ஆண்டுகளாக அமைக்கப்பட்டு 24 மணி நேர கண்காணிப்பு செய்யப்பட்டு வருகிறது.

தற்போது ஒரு சில இஸ்ரேலியர்கள் மட்டுமே இங்கு தங்கியுள்ளனர். மேலும் பலர் வர வாய்ப்புகள் இருந்தாலும் முறையான சோதனைக்கு பிறகே இங்கு தங்க வைக்கப்படுவார்கள். கொடைக்கானல் எல்லையான வெள்ளிநீர் வீழ்ச்சி பகுதியிலும் சோதனைச்சாவடி அமைத்து கண்காணிப்பு பணி நடந்து வருகிறது. இஸ்ரேல் மீது பாலஸ்தீனத்தில் உள்ள ஹமாஸ் பிரிவினர் தாக்குதல் நடத்தி வரும் நிலையில் இதனை பயன்படுத்தி வேறு யாரும் இங்கு அடைக்கலம் வராத அளவுக்கு கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வழியாக மோட்டார் சைக்கிள்களில் கடந்து செல்பவர்களையும் கண்காணித்து விசாரணை நடத்தி வருகிறோம் என்றார்.

# கம்பத்தில் மந்தையம்மன் கோவில் திருவிழாவை முன்னிட்டு இரட்டை மாட்டு வண்டி பந்தயம்



கம்பம், அக். 12

தேனி மாவட்டம் கம்பத்தில் மந்தையம்மன் கோவில் திருவிழா வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக கம்பம் உத்தமபுரம் பிரமலைக்கள்ளர் இளைஞர் அணி மகாசபை சார்பில் 36 இரட்டை மாட்டு வண்டி எல்கை பந்தயம் நடைபெற்றது.

இந்த மாட்டுவண்டி பந்தயத்தில் தேனி, மதுரை, சிவகங்கை, திண்டுக்கல், திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து மாட்டு வண்டிகள் பங்கு பெற்றனர். இந்த போட்டியில் பங்கு பெற்ற மாடுகள் பந்தய எல்லையை நோக்கி சீறிப்பாய்ந்து ஓடின. இதில் மாடுகளையும், மாட்டு வண்டியை ஓட்டுபவர்களையும் உற்சாகப்படுத்தும் வகையில் பார்வையாளர்கள் ஆரவாரம் செய்தனர்.

இந்த மாட்டு வண்டி பந்தயத்தில் தட்டான் சிட்டு, தேன்சிட்டு, பூஞ்சிட்டு, கரிச்சான்மாடு, நடுமாடு, பெரியமாடு என 6 வகையான பிரிவுகளில் 80 க்கும் மேற்பட்ட ஜோடி மாடுகள் கலந்து கொண்டன.

இந்த போட்டியில் வெற்றி பெற்ற மாடுகளுக்கு பரிசு தொகை, கோப்பை பரிசாக வழங்கப்பட்டது. இந்த போட்டியானது கம்பத்தில் இருந்து கம்பம்மெட்டு வரைசுமார் 8 கி.மீ தூரம் உள்ள சாலையில் நடைபெற்றது. மாட்டு வண்டி எல்கை பந்தயத்தை ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கண்டுகளித்தனர்.

# அரூரில் மர்ம காய்ச்சலுக்கு மாணவர் பலி மறியலில் ஈடுபட்ட உறவினர்கள் மீதும் வழக்கு



தருமபுரி, அக். 12

தருமபுரி மாவட்டம் அரூர் அருகே உள்ள சூரம்பட்டியைச் சேர்ந்த அழகரசன் மகன் கிரி மர்ம காய்ச்சலுக்கு உயிரிழந்தார்.

அவரது சாவில் சந்தேகம் இருப்பதாகவும், அவருக்கு சிகிச்சை அளித்த தனியார் ஆஸ்பத்திரிகளின் டாக்டர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நேற்று உறவினர்கள் மற்றும் அப்பகுதி கிராம மக்கள் சிலர் அரூரில் உள்ள சேலம் சென்னை சாலையில் மறியலில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட கிரியின் உறவினர்களான சூரம்பட்டியைச் சேர்ந்த சம்பத், அரசு, அழகு, குமார், ரமேஷ், அழகேசன், கண்ணையன், வினோத் குமார், தாமோதரன், சீனிவாசன் மற்றும் ஜடையம்பட்டியைச் சேர்ந்த ரவி உள்ளிட்ட அப்பகுதியைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்டவர்கள் மீது போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மாமல்லபுரம் கலங்கரை விளக்கம் அருங்காட்சியகம் பராமரிப்பு காரணமாக மூடல்




மாமல்லபுரம், அக். 12

மாமல்லபுரம் சுற்றுலா வரும் பார்வையாளர்கள் அங்குள்ள கலங்கரை விளக்கம் மற்றும் கப்பல் அருங்காட்சியகத்தை பார்த்து ரசித்து செல்வது வழக்கம்.

மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் இயங்கும் கலங்கரை விளக்கம், கப்பல் அருங்காட்சியகம் இன்று முதல் பராமரிப்பு காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டு உள்ளது.

மறு உத்தரவு வரும்வரை சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி இல்லை என நிர்வாகம் அறிவித்து உள்ளது.

# ஓசூர் பகுதியில் வளர்ச்சி திட்ட பணிகளை மேயர் சத்யா ஆய்வு



ஓசூர், அக். 12

ஓசூர் மாநகராட்சி 29 வது வார்டிற்குட்பட்ட சானசந்திரம், முல்லை நகர், திரு.வி.க.நகர் ஆகிய பகுதியில் மாநகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.164 லட்சம் மதிப்பீட்டில் வளர்ச்சிப் பணிகள் நடை பெற்று வருகிறது. இதனை, மேயர் எஸ்.ஏ.சத்யா, மாநகராட்சி அதிகாரி களுடன் நேரில் பார்வையிட்டு கள ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சாலையின் தரம்,

அதன் உயரம், அகலம் குறித்தும் மற்றும் மக்களுக்கு தேவையான கழிவு நீர் கால்வாய், தெரு விளக்குகள், சாலை வசதிகள், குடிநீர் வசதிகள் சரியான முறையில் செய்து கொடுக்கப்படு கிறதா? என அவர் கேட்டறிந்தார். தொடர்ந்து, அப்பகுதியில், மின் தகன மேடை, கால் சென்டர் கட்டிடம், ரேஷன் கடை, அங்கன்வாடி மைய கட்டிடம் ஆகியவற்றையும் அவர் ஆய்வு செய்தார்.

பின்னர் குடியிருப்பு மக்களின் குறைகளையும், மேயர் சத்யா கேட்டறிந்தார்.

இந்நிகழ்வில், மண்டல குழு தலைவர் ரவி, மாமன்ற உறுப்பினர் தில்ஷாத் ரகுமான். மற்றும் கட்சியினர், பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# யூடியூப் மூலம் வியாபாரம்: தூத்துக்குடி வியாபாரியை வேலூருக்கு வரவழைத்து 36 ஆடுகள் திருட்டு

வேலூர், அக். 12

தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு பகுதியை சேர்ந்தவர் பெருமாள் (வயது 58). ஆடு வியாபாரி.

இவர் சொந்தமாக ஆடு வைத்துள்ளவர்களிடம் இருந்து ஆடுகளை வாங்கி விற்பனை செய்து வருகிறார். பெருமாள் ஆடுகளை வீடியோ எடுத்து யூடியூப்பில் பதிவு செய்து ஆடு தேவைப்படுபவர்கள் என்னை தொடர்பு கொள்ளலாம் என செல்போன் எண்ணை பதிவிட்டு இருந்தார். இந்த நிலையில் கடந்த வாரம் பெருமாளை செல்போனில் தொடர்பு கொண்ட நபர் ஒருவர் தனக்கு ஆடுகள் தேவைப்படுகிறது, ஆடுகளை வேலூருக்கு கொண்டு வந்தால் நேரில் பணம் தருவதாகவும் தெரிவித்தார். இதையடுத்து பெருமாள் தன்னிடம் இருந்த 36 ஆடுகளை லாரியில் ஏற்றிக்கொண்டு வேலூருக்கு வந்தார். பாகாயம் அடுத்த ஏ. கட்டுப்படி அருகே லாரி மற்றும் கூலியாட்களுடன் தயாராக இருந்த மர்ம நபர் பெருமாள் கொண்டு வந்த ஆடுகளை அவரது லாரியில் ஏற்றினார். பின்னர் ஆம்பூரில் பணம் தருவதாக கூறி பெருமாளை அழைத்துச் சென்றார். ஆம்பூர் சென்றதும் பணம் எடுத்து வருவதாக கூறிவிட்டு லாரியில் ஆடுகளுடன் வாலிபர் சென்றுவிட்டார். அவரது செல்போனை தொடர்பு கொண்டபோது சுவிட்ச் ஆப் செய்யப்பட்டு இருந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த பெருமாள் இது குறித்து பாகாயம் போலீசில் புகார் செய்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். குடியாத்தம் பகுதியில் ஆடுகளுடன் லாரி நின்று கொண்டு இருப்பதை கண்டுபிடித்தனர். அங்கிருந்தவர்களிடம் விசாரணை நடத்தியதில் லாரி வாடகை மற்றும் கூலி ஆட்களுக்கு பணம் தராததால் இந்தப் பகுதியில் காத்து இருக்கிறோம் என தெரிவித்தனர். இதையடுத்து போலீசார் லாரியுடன் ஆடுகளை மீட்டனர். பாகாயம் போலீஸ் நிலையத்திற்கு கொண்டு வந்தனர். மேலும் ஆடுகளை நூதன முறையில் திருடி சென்ற நபரை தேடி வருகின்றனர்.

# சீர்காழி கோட்டத்தில் உள்ள ஆச்சாள்புரம் மற்றும் அரசூர் ஆகிய பகுதிகளில் இன்று மின்தடை ஏற்படும் பகுதிகள்

சீர்காழி, அக். 12

சீர்காழி கோட்டத்தில் உள்ள ஆச்சாள்புரம் மற்றும் அரசூர் ஆகிய துணை மின் நிலையங்களில் பராமரிப்பு பணிகள் நாளை (வியாழக்கி ழமை) நடைபெற உள்ளது. இதனால் அந்த துணை மின் நிலையங்களில் இருந்து மின் விநியோகம் பெறும் பகுதிகளான கொடக்கார மூலை, பழைய பாளையம், கொட்டாய் மேடு, தாண்டவன்குளம் எருக்கூர், புத்தூர், சோதியக்குடி, மாதிர வேளூர் உள்ளிட்ட பகுதிகளில் நாளை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மின்விநியோகம் இருக்காது. இந்த தகவலை உதவி செயற்பொறியாளர் விஸ்வநாதன் தெரிவித்து ள்ளார்.

இதேப்போல் வைத்தீஸ்வ ரன் கோவில் துணை மின் நிலையத்தில் உள்ள திருப்புன்கூர் உயரழுத்த மின்பாதையில் பராமரிப்பு பணியின் நாளை (வியாழக்கிழமை) நடைபெற உள்ளது. இதனால் அங்கிருந்து மின்விநியோகம் பெறும் பகுதிகளான கதிராமங்கலம், திருப்புன்கூர், கன்னியாகுடி பெருமங்கலம், சேத்தூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் நாளை காலை 9 மணி முதல் 5 மணி வரை மின்நிறுத்தம் செய்யப்படும். இந்த தகவலை உதவி செயற்பொறியாளர் விஜயபா ரதி தெரிவித்தார்.



# உயிர் பாதி உனக்கே... திரிஷாவை நினைத்து உருகும் விஜய்

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'லியோ'. இப்படத்தை செவன் ஸ்கிரீன் ஸ்டூடியோஸ் சார்பில் லலித் குமார் தயாரித்துள்ளார். அர்ஜுன், சஞ்சய் தத், திரிஷா, பிரியா ஆனந்த், மன்சூர் அலிகான், மிஷ்கின், கௌதம் வாசுதேவ் மேனன், சாண்டி, மேத்யூ தாமஸ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

இந்த படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். லியோ திரைப்படம் அக்டோபர் 19ம் தேதி வெளியாக இருக்கிறது.ஏற்கனவேஇந்தபடத்தில்இடம்பெற்றுள்ள இரண்டுபாடல்கள்மற்றும்படத்தின்டிரைலர்ஏற்கனவே வெளியாகி பெரும் வரவேற்பை பெற்று வருகிறது.

இந்த நிலையில், லியோ படத்தின் "அன்பெனும்" பாடல் தற்போது வெளியாகி இருக்கிறது. விஜய் மற்றும் திரிஷா இடையேயான அன்பை வெளிப்படுத்தும் வகையில் உருவாகி இருக்கும் அன்பெனும் பாடல் தற்போது சமூக வலைதளங்களில் வேகமாக வைரல் ஆகி வருகிறது.

# டைகர் 3 டிரைலர் வெளியீடு எப்போது தெரியுமா?



சல்மான் கான் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'டைகர் 3'.

இப்படம் தீபாவளியன்று திரையரங்கு களில் வெளியாக வுள்ளது.

கபீர் கான் இயக்கத்தில் சல்மான் கான், கத்ரீனா கைஃப் நடிப்பில் கடந்த 2012ஆம் ஆண்டு வெளியான திரைப்படம் 'ஏக் தா டைகர்'. இப்படம் பெரும் வெற்றி பெற்றது. இதைத்தொடர்ந்து 2017ஆம் ஆண்டு அலிஅப்பாஸ்ஜாஃபர்இயக்கத்தில் 'டைகர்ஜிந்தாஹே' திரைப்படம் வெளியாகி வரவேற்பை பெற்றது.

இதன் மூன்றாம் பாகமாக தற்போது 'டைகர் 3' உருவாகியுள்ளது. மணீஷ் சர்மா இயக்கியுள்ள இப்படத்தில் சல்மான் கான், கத்ரீனா கைஃப் நடித்துள்ளனர். யஷ்ராஜ் பிலிம்சின் ஸ்பை திரில்லராக உருவாகியுள்ள இப்படம் தீபாவளியன்று திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

இந்நிலையில், இப்படத்தின் புதிய அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி 'டைகர் 3' திரைப்படத்தின் டிரைலர் 16ஆம் தேதி வெளியாகவுள்ளதாக படக்குழு போஸ்டரை பகிர்ந்து அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பால் ரசிகர்கள் உற்சாகத்தில் உள்ளனர்.

# ஆக்ஷனில் அதிரடிகாட்ட தயாரான அதர்வா



கடந்த 2016ஆம் ஆண்டு தினேஷ், மியா ஜார்ஜ், நிவேதா பெத்துராஜ் நடிப்பில் வெளியான 'ஒரு நாள் கூத்து' திரைப்படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமானவர் நெல்சன் வெங்கடேசன். அதன் பின்னர் 'மான்ஸ்டர்', 'ஃபர்ஹானா' போன்ற திரைப்படங்களை இயக்கி வரவேற்பை பெற்றார்.

இவர் தற்போது புதிய படம் ஒன்றை இயக்குகிறார். அதர்வா கதாநாயகனாக நடிக்கும் இந்த படத்தில் நிமிஷா சஜயன் கதாநாயகியாக நடிக்கிறார். ஒலிம்பியா மூவிஸ் நிறுவனம் தயாரிக்கும் இப்படம் ஆக்ஷன் திரில்லர் பாணியில் உருவாகவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்நிலையில், இப்படத்தின் புதிய அப்டேட் வெளியாகியுள்ளது. அதன்படி, இந்த படத்திற்கு படக்குழு 'டி.என்.ஏ' என தலைப்பு வைத்துள்ளது. மேலும், இது தொடர்பான போஸ்டரையும் வெளியிட்டுள்ளது. இந்த போஸ்டர் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

# ரொமான்ஸில் அசத்தும் ராஷ்மிகா ரன்பீர் கபூர்.. வைரலாகும் பாடல்



பாலிவுட்டின் பிரபல நடிகரான ரன்பீர் கபூர் தற்போது 'அர்ஜுன் ரெட்டி', 'கபீர் சிங்' போன்ற படங்களை இயக்கிய இயக்குனர் சந்தீப் ரெட்டி வங்கா இயக்கத்தில் 'அனிமல்' திரைப்படத்தில் நடித்துள்ளார். இவருக்கு ஜோடியாக ரஷ்மிகா மந்தனா நடித்துள்ளார். இந்த படத்தில் அனில் கபூர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார்.

பூஷன் குமார் மற்றும் பிரணவ் ரெட்டி வங்கா இணைந்து டி சீரிஸ் மற்றும் பத்ரகாளி பிக்சர்ஸ் மூலம் இப்படத்தை தயாரித்துள்ளனர். இப்படம் வருகிற டிசம்பர் 1ஆம் தேதி இந்தி, தெலுங்கு, தமிழ், கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

இந்நிலையில், இப்படத்தின் முதல் பாடலான 'நீ வாடி' பாடலின் வீடியோ வெளியாகியுள்ளது. ரன்பீர் கபூர் ராஷ்மிகா ரொமான்ஸில் அசத்தும் இந்த பாடலை ரசிகர்கள் சமூக வலைதளத்தில் அதிகம் பகிர்ந்து வருகின்றனர்.

# போஸ்டர் வெளியிட்டு நிவின் பாலிக்கு வாழ்த்து தெரிவித்த படக்குழு




இயக்குனர் ராம் இயக்கத்தில் உருவாகி வரும் திரைப்படம் 'ஏழு கடல் ஏழு மலை' இந்த படத்தில் கதாநாயகனாக மலையாள நடிகர் நிவின் பாலி நடிக்கிறார். இவருக்கு ஜோடியாக அஞ்சலி நடித்து வருகிறார். மேலும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிகர் சூரி நடித்துள்ளார். வி ஹவ்ஸ் புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் இப்படத்திற்கு யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கிறார்.

இப்படத்தின் முதல் தோற்ற போஸ்டர் சமீபத்தில் வெளியானது. இதில் நிவின் பாலியின் தோற்றம் ரசிகர்களை கவர்ந்து பெரிய அளவில் பேசப்பட்டது. 'ஏழு கடல் ஏழு மலை' படத்தில் 90 நிமிடங்களுக்கு கிராபிக்ஸ் காட்சிகள் இடம்பெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்நிலையில், இப்படத்தின் புதிய போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. அதாவது இன்று இயக்குனர் ராம் மற்றும் நடிகர் நிவின் பாலி தங்களது பிறந்த நாளை கொண்டாடி வருகின்றனர். இவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து படக்குழு போஸ்டரை ஒன்றை வெளியிட்டுள்ளது.

# லதா ரஜினிகாந்த் மீதான வழக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு



நடிகர் ரஜினிகாந்த் நடித்த 'கோச்சடையான்' திரைப்படத்தை தயாரித்ததற்காக தனியார் விளம்பர நிறுவனத்திடம் ரூ. 6.2 கோடியை கடன் பெற்றிருந்தார். இதற்கு லதா ரஜினிகாந்த் உத்தரவாத கையொப்பமிட்டிருந்தார். கடன் பெற்ற பணத்தை தனியார் நிறுவனத்திற்கு அளிக்கவில்லை என தெரிவித்து தனியார் நிறுவனம் சார்பில் கடந்த 2015ஆம் ஆண்டு பெங்களூர் மாநகரம் 6வது கூடுதல் முதன்மை நீதிமன்றத்தில் ஒரு வழக்குதாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த போலீசார் லதா ரஜினிகாந்த் மீது போலி ஆவணங்களை தாக்கல் செய்தது, தவறான அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தனர்.

இதையடுத்து, லதா ரஜினிகாந்த் தன் மீதான குற்றப்பத்திரிகையை ரத்து செய்ய கூறி கர்நாடக உயர் நீதிமன்றத்தில் வழக்கைத் தொடர்ந்தார். இதை விசாரித்த கர்நாடக உயர் நீதிமன்றம் குற்றப்பத்திரிகையில் லதா ரஜினிகாந்த் மீது தெரிவிக்கப்பட்டுள்ள இந்தியத் தண்டனைச் சட்டம் 196 , 199 , 420 ஆகிய பிரிவுகளை மட்டும் ரத்து செய்து உத்தரவிட்டது. மேலும், ஆதாரங்களைத் திரித்துத் தாக்கல் செய்த பிரிவுகளின்கீழ் வழக்கின் விசாரணையை மேற்கொள்ளலாம் என்று பெங்களூரு முதன்மை நீதிமன்றத்துக்கு அனுமதியளிக்கப்பட்டது.

இந்த உத்தரவிற்கு எதிராக லதா ரஜினிகாந்த் சார்பில் மேல்முறையீடு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் லதா ரஜினிகாந்திற்கு எதிரான மோசடி வழக்கை தொடர்ந்து விசாரிக்க பெங்களூரு நீதிமன்றத்திற்கு அனுமதியளித்திருப்பதுடன் மோசடி வழக்கில் இருந்து விடுவிக்க கோரி அவர் பெங்களூர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து கொள்ளலாம் என்றும் பெங்களூர் நீதிமன்றம் உத்தரவிடும் பட்சத்தில் லதா ரஜினிகாந்த் நேரில் ஆஜராக வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தனது உத்தரவில் தெளிவுப்படுத்தியுள்ளது.

# வெப் தொடரில் நடிக்கும் தன்யா ஹோப்



நடிகை தன்யா ஹோப், சந்தானத்திற்கு ஜோடியாக கிக் படத்தில் நடித்துள்ளார்.

இவர் நடிப்பில் தற்போது வெப்பன் திரைப்படம் வெளியாக உள்ளது.

தடம் படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் கதாநாயகியாக அறிமுகமானவர் தன்யா ஹோப். இப்படத்தை தொடர்ந்து ஹரிஷ் கல்யாணுக்கு ஜோடியாக தாராள பிரபு படத்திலும், சந்தானத்திற்கு ஜோடியாக கிக் படத்திலும் நடித்திருந்தார். இவர் நடிப்பில் தற்போது வெப்பன்திரைப்படம் வெளியாக உள்ளது.

திரைப்படங்களில் நடித்து வந்த தான்யா ஹோப் தற்போது 'லேபிள்' என்னும் வெப் தொடரில் நடித்திருக்கிறார். ஜெய் கதாநாயகனாக நடித்துள்ள இந்த வெப் தொடரை அருண் ராஜா காமராஜ் எழுதி இயக்கி உள்ளார். மகேந்திரன், ஹரிசங்கர் நாராயணன், சரண் ராஜ், ஸ்ரீமன், இளவரசு மற்றும் சுரேஷ் சக்ரவர்த்தி உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து இருக்கிறார்கள்.

இதன் மோஷன் போஸ்டர் சமீபத்தில் வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பு பெற்று வருகிறது. இந்த வெப் தொடர் விரைவில் டிஸ்னி+ ஹாட்ஸ்டார் ஓடிடி தளத்தில் வெளியாக உள்ளது.

# சதம் முதல் சிக்சர் வரை.. ஒரே போட்டியில் பல சாதனைகளை படைத்த ரோகித் சர்மா



உலக கோப்பை கிரிக்கெட் போட்டிகள் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. டெல்லி அருண் ஜெட்லி மைதானத்தில் இந்தியா, ஆப்கானிஸ்தான் இடையிலான போட்டி இன்று நடைபெறுகிறது. டாஸ் வென்ற ஆப்கானிஸ்தான் பேட்டிங் தேர்வு செய்தது. முதலில் பேட்டிங் செய்த ஆப்கானிஸ்தான் அணி 50 ஓவர்கள் முடிவில் 272 ரன்களை எடுத்தது.

தொடர்ந்து களமிறங்கிய இந்திய அணி வேகமாக ரன் குவிப்பில் ஈடுபட்டது. இந்தியா சார்பில் துவக்க வீரராக களமிறங்கிய கேப்டன் ரோகித் சர்மா அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இவர், 84 பந்துகளில் 131 ரன்களை குவித்து அசத்தினார். இதில் 16 பவுண்டரிகளும், 5 சிக்சர்களும் அடங்கும். இந்த போட்டியில் சதம் அடித்த ரோகித் சர்மா பல்வேறு சாதனைகளை படைத்துள்ளார்.

அதன்படி, உலகக் கோப்பை தொடர்களில் அதிக முறை சதங்கள் அடித்த வீரர்கள் பட்டியலில் ரோகித் சர்மா முதலிடம் பிடித்துள்ளார். அதிக சதங்கள் அடித்திருந்த வீரர்களில் ரோகித் சர்மா, சச்சின் டெண்டுல்கர் சாதனையை முறியடித்துள்ளார். இத்துடன் உலகக் கோப்பை தொடரில் ஆயிரம் ரன்களை கடந்த நான்காவது இந்திய வீரர் என்ற பெருமையை ரோகித் சர்மா பெற்றுள்ளார். முன்னதாக சச்சின் டெண்டுல்கர், விராட் கோலி மற்றும் சவுரவ் கங்குலி ஆகியோர் இந்த சாதனையை படைத்து இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதை தொடர்ந்து சர்வதேச கிரிக்கெட்டில் அதிக சிக்சர்களை விளாசிய வீரர் என்ற சாதனையை ரோகித் சர்மா படைத்துள்ளார்.

# இந்தியா வெற்றிபெற 273 ரன்களை இலக்காக நிர்ணயித்தது ஆப்கானிஸ்தான்



உலக கோப்பை கிரிக்கெட் போட்டிகள் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. டெல்லி அருண் ஜெட்லி மைதானத்தில் இந்தியா, ஆப்கானிஸ்தான் இடையிலான போட்டி இன்று நடைபெறுகிறது. டாஸ் வென்ற ஆப்கானிஸ்தான் பேட்டிங் தேர்வு செய்தது.

அதன்படி, ஆப்கானிஸ்தான் அணி முதலில் களமிறங்கியது. ஹஷ்மதுல்லா ஷஹிதி, அஸ்மதுல்லா ஒமர்ஜாய் ஆகியோர் பொறுப்புடன் ஆடி அரை சதமடித்தனர்.

ஹஷ்மதுல்லா ஷஹிதி 80 ரன்னும், அஸ்மதுல்லா ஒமர்ஜாய் 62 ரன்னும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இறுதியில், ஆப்கானிஸ்தான் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 272 ரன்களை எடுத்துள்ளது.

இந்திய அணி சார்பில் பும்ரா 4 விக்கெட்டும், ஹர்திக் பாண்ட்யா 2 விக்கெட்டும், குல்தீப் யாதவ், ஷர்துல் தாக்குர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 273 ரன்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி களமிறங்குகிறது.

# கலாய்த்த ரசிகர்கள்: வேண்டாம் என கூறிய விராட் கோலி கட்டியணைத்த நவீன் உல் ஹக் நெகிழ்ச்சி வீடியோ



உலகக் கோப்பை கி2ரிக்கெட் போட்டி இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் 10 நாடுகள் பங்கேற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒருமுறை ரவுண்ட் ராபின் முறையில் மோதவேண்டும். லீக் முடிவில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறும்.

இந்நிலையில், இந்திய அணி 2வது போட்டியில் ஆப்கானிஸ்தானுடன் இன்று மோதியது. இதில் டாஸ் வென்று முதலில் விளையாடிய ஆப்கானிஸ்தான் அணி 50 ஓவர் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 272 ரன்கள் எடுத்தது. இதனையடுத்து களமிறங்கிய இந்திய அணி ரோகித் சர்மாவின் அதிரடி ஆட்டத்தால் 35 ஓவர்களில் 273 ரன்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த போட்டியில் அனைத்து ரசிகர்களும் விராட் கோலி நவீன் உல் ஹக் மோதல் குறித்து ஆவலுடன் எதிர்பார்த்து கொண்டிருந்தனர். டுவிட்டரில் கூட mango என்ற வார்த்தை டிரெண்ட் ஆனது. நவீன் பேட்டிங் செய்த போது ரசிகர்கள் விராட் கோலி என ஆர்பரித்தனர். அதேபோல விராட் கோலி பேட்டிங் செய்த போது நவீன் பந்து வீசினார்.

அப்போது ரசிகர்கள் மீண்டும் விராட் கோலி என கோஷமிட்டனர். அப்போது விராட் கோலி வேண்டாம் என கைசைகை மூலம் காட்டினார். இதனையடுத்து நவீன் உல் ஹக் ஓடி வந்து விராட் கோலியை கட்டியணைத்து இருவரும் கைகுலுக்கி சிரித்தனர். இந்த செயல் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# உலகக் கோப்பை 2023: ஆப்கானிஸ்தானை 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தியது இந்தியா



உலக கோப்பை கிரிக்கெட் போட்டிகள் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. டெல்லி அருண் ஜெட்லி மைதானத்தில் இந்தியா, ஆப்கானிஸ்தான் இடையிலான போட்டி இன்று நடைபெறுகிறது. டாஸ் வென்ற ஆப்கானிஸ்தான் பேட்டிங் தேர்வு செய்தது. முதலில் பேட்டிங் செய்த ஆப்கானிஸ்தான் அணி 50 ஓவர்கள் முடிவில் 272 ரன்களை எடுத்தது.

தொடர்ந்து களமிறங்கிய இந்திய அணி வேகமாக ரன் குவிப்பில் ஈடுபட்டது. இந்தியா சார்பில் துவக்க வீரராக களமிறங்கிய கேப்டன் ரோகித் சர்மா அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இவர், 84 பந்துகளில் 131 ரன்களை குவித்து அசத்தினார். இதில் 16 பவுண்டரிகளும், 5 சிக்சர்களும் அடங்கும். இவருடன் களமிறங்கிய இஷான் கிஷன் தன் பங்கிற்கு 47 ரன்களை குவித்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய விராட் கோலி அரைசதம் அடித்தார். இவருடன் ஆடிய ஸ்ரேயஸ் அய்யர் தன் பங்கிற்கு அதிரடி ஆட்டத்தை ஆடினார். இதன் மூலம் இந்திய அணி 35 ஓவர்கள் முடிவில் 273 ரன்களை குவித்து 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. போட்டி முடிவில் விராட் கோலி 55 ரன்களையும், ஸ்ரேயஸ் அய்யர் 25 ரன்களையும் குவித்தனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.